No. of Printed Pages : 8

701653 **6285**

பதிவு எண்
Register Number

# பகுதி - III – சிறப்புத் தமிழ்
# Part III – Advanced Language – TAMIL

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 180

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை, சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் 4 பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிற்கேற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து உரியவாறு விடையளிக்கவும்.

## பகுதி - I

**குறிப்பு :** பின்வரும் அனைத்து வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் பொருத்தமான விடைகளைத் தேர்ந்தெடுக்கவும். பொருந்தும் விடையினைக் குறிக்கும் எழுத்தை மட்டும் வினா எண்ணோடு இணைத்து விடைத்தாளில் எழுதவும். **30x1=30**

**1.** பண்டைக் காலப் படை வகைகளுள் சிறப்பானதை உணர்த்தும் பாடலடி எது?

(அ) பாரதநாடு பழம்பெரும் நாடே
(ஆ) பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
(இ) நல்லன யாவையும் நாடுறு நாடு
(ஈ) மாரத வீரர் மலிந்த நன்னாடு

**2.** மாறியிருப்பவர் யார் ?

(அ) நான்முகனார் (ஆ) நக்கீரர்
(இ) செந்நாப் போதார் (ஈ) பெருநாவலர்

[ திருப்புக

3. துறைவன் துறந்தமை தூற்றாகொன் முன்கை
இறைஇறவா நின்ற வளை
- இக்குறளில் தலைவியின் உள்ள இயல்பு எத்தகையதாகக் காணப்படுகிறது?
(அ) தலைவனைப் பழித்தல் (ஆ) தன்னைத் தேற்றல்
(இ) தோழியொடு புலத்தல் (ஈ) தலைவனொடு புலத்தல்

4. நெய்தற்கலியில் 'தீம்பா லுண்பவர் கொள்கலம் வரைதல்' என்னும் உவமை வாயிலாகத் தோழி வலியுறுத்துவது ________ .
(அ) கூறியது மறாஅமை (ஆ) நலனுண்டு துறத்தல்
(இ) மறை பிறரறியாமை (ஈ) போற்றாரைப் பொறுத்தல்

5. 'துன்பம் அடைவதும், அது நீங்குதலும் பிறரால் வருவனவல்ல' என்ற கருத்தை உணர்த்தும் தொடர் யாது?
(அ) தீதும் நன்றும் பிறர்தர வாரா (ஆ) நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
(இ) சாதலும் புதுவ தன்றே (ஈ) முனிவின் இன்னா தென்றலு மிலமே

6. கீழ்வரும் எவ்வடியிலிருந்து, பெண்கள் ஒப்பனை வழக்கம் வெளிப்படுகிறது ?
(அ) மாதர் செங்கண் வரிவனப் பழித்துப்
(ஆ) மாதவி மணிமே கலைமுகம் நோக்கி
(இ) தாமரை தண்மதி சேர்ந்தது போல
(ஈ) காதல் நெஞ்சங் கலங்கிய காரிகை

7. கீழுள்ள அடிகளுள் எதனில் உருவகத் தொடர் உள்ளது ?
(அ) கருங்கடலுடுத்த தரணி (ஆ) வறுமைப் பெருந்துயருழந்தேன்
(இ) சுடர்தரத் தோன்றிய தோன்றல் (ஈ) மெய்த்தவப் படிவ வேதியன்

8. கீழுள்ள சுரதாவின் பாடலடிகளுள் எதனில் உருவகம் உள்ளது?
(அ) அவர் சொன்ன உவமைகளைத் தொகுப்போமாயில்
(ஆ) வெள்ளத்தில் தோன்றியெழும் தண்ணீர் முட்டை
(இ) ஆறுபடி நூறுபடியாகும்
(ஈ) பாடல் அமைப்போர்க்குப் பல்லவி

9. 'சேற்றிலே சேர்ந்துழலும் சீரற்ற சமுதாயம் மாற்றியோர் உலகு செய்வோம்' - இவ்வடிகள் தரும் பொருளை வெளிப்படுத்தும் தொடர் எது?
(அ) நிலையும் விழைவும் (ஆ) செயலும் நன்மையும்
(இ) அழிவும் ஆற்றலும் (ஈ) ஆற்றலும் போற்றலும

10. உழைப்போன் பக்கமே நியாயம் உள்ளதென்பதை உணர்த்தக் கவிஞர் சொல்கேளான் வடித்துள்ள புதுக்கவிதை வரி எது?
(அ) கொடுத்ததை வாங்கிக் கொண்டு நடையைக் கட்டினேன்
(ஆ) ஓங்கி உயர்ந்த பனைமரம் மனக்கண்ணில் அசைந்து அழைத்தது
(இ) அய்யா ஒரு நாள் ஒரு பனைமரம் ஏறிப் பாருங்கள்
(ஈ) வெயிலில் கூடை சுமந்திருந்த நுங்கு வியாபாரி

11. தவறான சொல்லாட்சி பெற்றுள்ள வாக்கியம் எது?
(அ) மிதிலைப்பட்டி என்னும் ஒரு ஊர் சேலம் மாவட்டத்தில் உள்ளது
(ஆ) அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்னும் ஓர் அன்பர் எனக்கு உதவினார்
(இ) அங்கே கலைமகளும், திருமகளும் ஒருங்கே களிநடம் புரிந்தனர்
(ஈ) பல அரிய தமிழ்ச் சுவடிகள் பல நூற்றாண்டுகளாகச் சேகரித்து அவர் வீட்டில் பாதுகாக்கப் பெற்றிருந்தன

12. 'பரம்பரைக் குணம்' என்னும் கட்டுரையில் உ.வே.சா. குறிப்பிடும் வண்டிக்காரனின் பணிவும், உயர்ந்த பண்பாட்டு மரபும் அவன் கூறியதான கீழுள்ள எம்மொழியில் வெளிப்படுகிறது ?
(அ) இல்லை இப்பொழுது எனக்குப் பசி இல்லை
(ஆ) ரூபாய் தங்களிடமே இருக்கட்டும் 'நான் போய் வருகிறேன்'
(இ) தாங்கள் வேறு ஒன்றும் நினைத்துக் கொள்ளக் கூடாது
(ஈ) போகும் வழியில் தெரிந்தவர்கள் வீட்டில் சாப்பிடுவேன்

13. சாலை, சாலினி அவர்கள் குறிப்பிட்ட ஈழத்து வழக்குச் சொற்கள் நான்கு கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று ஏனையவற்றின் பொதுத் தன்மையிலிருந்து மாறுபட்டதாகும். அது எது ?
(அ) பேனை (ஆ) மளை (இ) ஓமாம் (ஈ) கீறுதல்

14. ஈழத்துப் பேச்சு வழக்கில் ஆகாரம் ஐகாரமாக ஒலிக்கப்படுவதைத் தெரிவிக்கும் சொல் :
(அ) பானை (ஆ) பேனை (இ) தறை (ஈ) மளை

15. தவறில்லாச் சொல்லாட்சி பெற்றிருப்பதைத் தேர்ந்தெடுக்கவும் :
(அ) காந்தியடிகள் மனத்திட்பம் கொண்டவர். எனவே இறுதி வரையிலும் போராடினார்
(ஆ) விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்றது. எனவே மக்கள் அயராது உழைத்தனர்
(இ) நாம் எல்லாரும் நல்லவரே. எனவே அவரைப் பற்றி அறிந்திருந்தோம்
(ஈ) அவன் விளக்கம் தெளிவாக இருந்தது. எனவே நன்றாக விளக்கினார்

[ திருப்புக

16. ‘தாழாது உழைத்தல்’ என்னும் கட்டுரையில் ‘தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்’ என்ற குறளை மேற்கோட்பபடுத்தி பாவலரேறு உணர்த்துவது யாது?
(அ) செயலை முடிப்பதற்கு முயற்சியும் உழைப்பும் தேவை
(ஆ) உழைப்பு தேவை என்பன ஒரு செயலுக்குரிய கூலியாகும்
(இ) தெய்வத்தையும் மனிதனால் வெல்ல இயலும்
(ஈ) முயற்சியும் மெய்வருத்தமும் தெய்வத்தின் முன் நிற்காது

17. எண்ணும்மை மட்டுமே பெற்றுள்ள வாக்கியம் எது ?
(அ) ஞாயிற்றைத் தன் வாழ்வுக்குத் துணையாகவும் கொண்டான்
(ஆ) உள்ள நிறைவோடு தன்னை வாழ்விக்கும் இறையை எண்ணிப் பார்த்தார்
(இ) பிற இயற்கை சக்திகளையும் உள்ளத்தில் எண்ணினான்
(ஈ) அப்போது அவன் வியப்பையும் மகிழ்வையும் பெற்றான்

18. சங்க இலக்கியங்களில் ‘கருப்பொருள்’ என்பது எதனைக் குறிக்கும்?
(அ) உணர்த்தும் பொருள்
(ஆ) வருணனைப் பகுதிகள்
(இ) மாந்தரும் பிறஉயிர், உயிரில் பொருள்கள்
(ஈ) நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற இடம்

19. கவிதை மானுடத்தின் ஊனுயிரில் ஒன்ற வேண்டும் - இவ்வாக்கியம் பற்றிக் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளுள் எது சரி?
(அ) உருவகம், ஆகுபெயர் ஆகிய இரண்டு ஆட்சியும் உள்ளன
(ஆ) உருவகம், மரபுத்தொடர் ஆகிய இரண்டும் உள்ளன
(இ) உருவக ஆட்சி மட்டுமே உள்ளது
(ஈ) ஆகுபெயராட்சி மட்டும் உள்ளது

20. சித்த மருத்துவத்திற்குப் பிறிதொரு பெயர் :
(அ) ஆயுர்வேதம் (ஆ) தமிழ் மருத்துவம்
(இ) அல்லோபதி (ஈ) யுனானி

21. கீழுள்ள வாக்கியங்களுள் எதனில் பொருளாகுபெயர் உள்ளது?
(அ) தேதி கிழித்தான் (ஆ) நெல் அவித்தனர்
(இ) ஊர் திரண்டது (ஈ) யானை வந்தாள்

22. கீழ் உள்ளவற்றில் எதனில் உவமையாகுபெயர் உள்ளது?
(அ) சென்னை செழிக்கிறது (ஆ) மயில் ஆடுகிறாள்
(இ) தக்க சமயத்தில் கொடுத்தான் (ஈ) குறள் படித்தாள்

23. மாறுபட்ட பெயரெச்சம் எது?
(அ) படித்த (ஆ) நல்ல (இ) ஓடிய (ஈ) சிரிக்கிற

24. கீழுள்ளவற்றுள் எது மாறுபட்ட இடைச்சொல்?
(அ) கண் (ஆ) ஓடு (இ) அது (ஈ) இன்

25. ஒன்றுக்கு மேற்பட்ட இடைச்சொல் பெற்றுள்ள சொல் எது?
(அ) நடந்தனன் (ஆ) உண்ணாய் (இ) அப்பையன் (ஈ) பொன்னன்

26. கீழ்வருவனவற்றுள் மூன்று அறிவு பெற்ற உயிர் எது?
(அ) சங்கு (ஆ) தும்பி (இ) எறும்பு (ஈ) தேவர்

27. கீழ்வருவனவற்றுள் உரிச்சொல் உணர்த்தாத தன்மை எது?
(அ) தொழில் (ஆ) இசை (இ) குறிப்பு (ஈ) பண்பு

28. கீழுள்ள தொடர்களுள் எது பிரிமொழிச் சிலேடைக்கு உரியதாகும்?
(அ) பலகை (ஆ) நிறம் பச்சை
(இ) விளக்கொளி (ஈ) தெருண்டோர்

29. நீருக்கும், கண்ணாடிக்கும் சிலேடையாக அமையத்தக்கது எது?
(அ) ஆடிக் குடத்தடையும் (ஆ) மூடித்திறக்கின் முகங்காட்டும்
(இ) வழவழப்பாயிருக்கும் (ஈ) தேங்கியே நிற்கும்

30. வஞ்சித்துறைக்கும், வஞ்சி விருத்தத்திற்கும் உள்ள வேறுபாடு கீழுள்ளவற்றுள் எதனால் அமையும்?
(அ) அடிவகை (ஆ) பாடல் எண்ணிக்கை
(இ) சீர்வகை (ஈ) அடி எண்ணிக்கை

## பகுதி - II

**குறிப்பு :** பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் **50** சொற்களில் **(31-ஆம்** வினா தவிர்த்து**)** விடை தருக.

### பிரிவு - அ

**(31 - 32) இரு** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x5=10**

31. ‘உலகம்’............ எனத் தொடங்கும் இறைவாழ்த்துச் செய்யுளை அடிபிறழாமல் எழுதுக.

**அல்லது**

‘விரைந்து’ எனத் தொடங்கும் சொல்வன்மை அதிகாரக் குறளையும் ‘நசை’ என முடியும் பிரிவாற்றாமை அதிகாரக் குறளையும் அடிபிறழாமல் எழுதுக.

[ திருப்புக

32. கலித்தொகையில் நெய்தல் நிலத்தின் அழகு எவ்வாறு காட்டப்படுகிறது ?

**அல்லது**

'என்று கொண் டந்த வந்தண னுரைப்ப'

விருசெவிக் கமுதெனக் கேட்டு' - இவ்வடி கொண்டு

கன்னனின் நற்பண்பினை எடுத்துக்காட்டுக.

## பிரிவு - ஆ

**(33 - 34) இரு** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x5=10**

33. 'படம் கீறுதல்' என்னும் சொல்லாட்சி தமிழ் இலக்கியத்தில் உள்ளதற்கு எடுத்துக்காட்டுத் தருக.

**அல்லது**

உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய சொற்களாகப் பெருஞ்சித்திரனார் குறிப்பன யாவை ?

34. முல்லை நில மக்களின் தெய்வ வழிபாடு பற்றிப் பேராசிரியர் ச. கணபதிராமன் கூறுவன யாவை ?

**அல்லது**

'கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள்' - குறிப்புத் தருக.

## பிரிவு - இ

**(35 - 38)** எவையேனும் இரு வினாக்களுக்கு விடையளிக்கவும். **2x5=10**

35. இருமடியாகுபெயர், இருபெயரொட்டு ஆகுபெயர்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36. இடைச்சொல்லின் பொது இலக்கணம் யாது? இடைச் சொற்களின் வகைகளை விளக்குக.

37. மாறுபடு புகழ்நிலை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

38. வஞ்சிப்பாவிற்குரிய சிறப்பு சீர்களும் தளைகளும் எவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

## பகுதி - III

**குறிப்பு :** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 100 சொற்கள் அளவில் விடை தருக.

### பிரிவு - அ

பின்வரும் **வினாவிற்கு** விடையளிக்கவும் 1x10=10

39. காமத்திற்கும் தீக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையினைத் திருக்குறள் வழி நின்று கூறுக.

**அல்லது**

புத்தபெருமானின் பெருமை மணிமேகலை மலர்வனம் புக்க காதையில் எவ்வாறு உணர்த்தப்படுகிறது ?

### பிரிவு - ஆ

பின்வரும் **வினாவிற்கு** விடையளிக்கவும் 1x10=10

40. செயல்திறன், செயலறிவு இவற்றைப் பாவலரேறு எங்ஙனம் வேறுபடுத்திக் காட்டுகிறார்?

**அல்லது**

ஆபிரகாம் பண்டிதரின் கல்வி நிலை பற்றிக் கூறுக.

### பிரிவு - இ

எவையேனும் **இரு** வினாக்களுக்கு விடையளிக்க. 2x10=20

41. ஐந்து ஐந்திணைகள் யாவை ? அவற்றைப் பற்றி விளக்குக.

42. மணிமேகலையின் கருத்து வளம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

43. நும் பாடப்பகுதியில் உள்ள வைணவ இலக்கியங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

44. கம்பராமாயணத்தின் இலக்கியச் சிறப்புகள் யாவை ?

### பிரிவு - ஈ

பின்வரும் **வினாக்களுக்கு** விடையளிக்கவும். 2x10=20

45. கீழுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து கட்டுரை எழுதுக. (கட்டுரை உவமை, மரபு, பழமொழி, இன்/இணைத்தொடர் ஆகியன பெற்று அமைதல் வேண்டும்)
   (i) சிறு குடும்பமும் சீரான வாழ்வும்
   (ii) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே
   (iii) சமூகத் தடைகளைத் தகர்ப்போம்

[ திருப்புக

46. உங்கள் தெருவிற்கு மின்விளக்கு வசதி வேண்டி உரிய அலுவலருக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் எழுதுக.

**அல்லது**

நும் கல்வித்தகுதி, தனித்திறமைகள் போன்றவற்றைக் குறிப்பிட்டு வேலை வேண்டி ஒரு நிறுவனத்தாருக்கு விண்ணப்பம் எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **150** சொற்கள் அளவில் விடை தருக. **4x15=60**

47. இருவேறு தன்மைகளை எடுத்துரைத்து, ஒழுக்கத்தின் மேன்மையினைத் திருவள்ளுவர் எவ்வாறு வலியுறுத்துகிறார்?

**அல்லது**

'யாதும் ஊரே..........' எனத் தொடங்கும் புறநானூற்று பாடலின் பண்பாட்டு இலக்கியச் சிறப்பினை எடுத்துக்காட்டுக.

48. பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில் திரிதராட்டிரனை உயர்ந்தவனாகப் பாரதியார் எவ்வாறு காட்டுகிறார் ?

**அல்லது**

அரிமதி தென்னகன் ஒருலகச் சிந்தனையினை வெளிப்படுத்துக. மானுடத்தின் சிறப்பினை அவர் எவ்வாறு உணர்த்துகிறார்?

49. 20-ஆம் நூற்றாண்டில் தொடக்க கால உரைநடையில் பிறமொழிச் சொற்கள் மலிந்திருந்தமையினை, டாக்டர் உ.வே.சா. வின் கட்டுரை கொண்டு வெளிப்படுத்துக.

**அல்லது**

பின்னணிப் பொருள் பொதிந்த நடையினைச் சாலை, சாலினியின் 'ஈழம் வழங்கும் தமிழ்' என்றும் கட்டுரை வழிநின்று விளக்குக.

50. சிறு தெய்வ வழிபாட்டு முறை பண்டைக் காலத்தில் நிலவியதைப் பேராசிரியர் ச. கணபதிராமன் எவ்வாறு நிறுவுகிறார்?

**அல்லது**

திலகவதி அவர்களின் மொழிநடைச் சிறப்பினை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

-oOo-